செ.வெ.எண்: 73/2017 நாள்: 26.01.2017

**<u>பத்திரிக்கைசெய்தி</u>**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பணமில்லாபரிவர்த்தனையினை அனைத்து வர்த்தகத்திலும் செயல்படுத்தி ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய அரசால் நுகர்வோர்களுக்குலக்கிகிராகா யோஜனா திட்டமும் வியபாரிகளுக்காக டிஜிதான் வியாபார் யோஜனா ஆகிய இரண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகிறது. இதனை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் எடுத்து செல்லும் நோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வைத்து 28.01.2017 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நாகர்கோவில் தெ.தி இந்துகல்லூரியில் வைத்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொள்ள உள்ளனர். இதன் ஒருபகுதியாக பள்ளி,கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்களுக்கு பணமில்லாபரிவர்த்தனைகுறித்த சுலோகம் எழுதுதல், விளம்பரவார்த்தைகள், பாடலை ஆகிய தனித்தனி போட்டிகள் நாகர்கோவில், தெ.தி. இந்துக் கல்லூரியல் வைத்து 28.01.2017 காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் மாணவ / மாணவியர் மற்றும் இளைஞர்கள் திரளாக கலந்துகொண்டு போட்டியில் பங்கேற்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.